**கவனிக்க.-** *2014.10.03 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III), பகுதி II மற்றும் பகுதி III ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1884 - 2014 ඔක්තෝබර් මස 10 වැනි සිකුරාදා - 2014.10.10

*1884 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1592 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1595 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ் மொழி மூலம் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - புத்தளம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, நவெம்பர் மாதம் 10 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, செத்தெம்பர் 24.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| புத்தளம் | முந்தல் | முந்தல் பிரதேச செயலாளர் பிரிவில் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம் |
| புத்தளம் | வனாத்தவில்லுவ | வனாத்தவில்லுவ பிரதேச செயலாளர் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கற்பிட்டி பிரிவில் விவாகப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம் |

10-454

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - புத்தளம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, நவெம்பர் மாதம் 10 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, செத்தெம்பர் 24.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| புத்தளம் | கற்பிட்டி | கற்பிட்டி நகர பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு (வைத்திய) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம் |
| புத்தளம் | சிலாபம் | சிலாபம் நகரப் பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு (வைத்திய) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம் |
| புத்தளம் | முந்தலம் | கந்ததொடுவாவ சின்னபாடு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் புத்தளம்பற்று பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம் |

10-455

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, நவெம்பர் மாதம் 10 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, செத்தெம்பர் 24.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பதுளை | பண்டாரவளை | பண்டாரவளை பிரிவின் மேலதிக விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பதுளை |

10-453

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - அநுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, நவெம்பர் மாதம் 10 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, செத்தெம்பர் 24.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | நுவரகம் பிரதேசம் | அநுராதபுரம் புதிய நகர பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் நுவரகம் பலாத்த பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம் |
| அநுராதபுரம் | மிஹிந்தலை | மங்கடவல பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் நுவரகம் பலாத்த பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம் |
| அநுராதபுரம் | பாலுகஸ்வெவ | மாதம்புவ கோறளை தெற்குப் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் நுவரகம் பலாத்த பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம் |

10-456

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம்

**தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் ஆரம்பத் தேர்ச்சிபெற்ற சேவைத் தொகையில் சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2013(2014)**

தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் கீழுள்ள அம்பாறை, அனுராதபுரம், கண்டி தொழில்நுட்பவியல் கல்லூரிகளிலும் மொனராகல, வீரவில தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் ஆரம்பத் தேர்ச்சிபெற்ற சேவைத் தொகைக்கு உரித்தான சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் பதவிக்காக உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | பதவி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் | 05 |

1. **ஆட்சேர்ப்பு முறை.**- தொழில்சார் பரீட்சை ஒன்றினதும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றினதும் பெறுபேறுகளுக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் முதலில் தொழில்சார் பரீட்சையொன்று நடத்தப்படுவதோடு, அப்பரீட்சையில் திறமை அடிப்படையில் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்பவர்களில் இருந்து, வெற்றிட எண்ணிக்கையின் இருமடங்கினர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் தொழில்சார் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் மொத்த எண்ணிக்கைக்கு ஏற்ப திறமை அடிப்படையில் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமான தொகையினர் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

**தொழில்சார் பரீட்சை :**

| | நேரம் (மணித்தியாலம்) | அதிகூடிய புள்ளிகள் தற்கான புள்ளிகள் | சித்தி அடைவ தற்கான புள்ளிகள் | பாடப்பரப்பு |
|---|---|---|---|---|
| 1 | 02 | 100% | 40% | 1. வீட்டு நிர்வாகம்<br>2. உணவு தயாரித்தல்<br>3. உணவு வழங்கல்<br>4. தூய்மை/விருந்துபசாரம் |

**கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :**

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | வழங்கப்படும் அதிகூடிய புள்ளிகள் |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| மேலதிக தொழில்சார் தகைமைகள் | 50 |
| மேலதிக அனுபவம் | 25 |
| நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறமைகள் | 05 |
| மொத்தம் | 100 |

2. **கல்வித் தகைமைகள்**.- க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு இரண்டு (2) திறமைச் சித்திகளுடன் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

3. **தொழில்சார் தகைமைகள்**.- மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில் தகைமை (NVQ) 2 ஆம் மட்டத்திற்கு குறையாத, உரிய பதவிக்கு ஏற்புடையதான துறையில், கீழே குறிப்பிடப்படும் தேர்ச்சிகளைப் பெற்றிருத்தல் வேண்டும் :

(1) ஹோட்டல் பாடசாலை மூலம் வீட்டு நிர்வாகம் அல்லது சமையற்கலை தொடர்பாக நடைபெறும் ஆறு மாத கால பாடநெறியைப் பூர்த்திசெய்த சான்றிதழ் ;

அல்லது

(2) தொழில் பயிற்சி அதிகார சபையினால் நடத்தப்படும் வீட்டு நிர்வாகம் அல்லது சமையற்கலை தொடர்பான ஆறு மாத கால பாடநெறியைப் பூர்த்திசெய்த சான்றிதழ் ;

அல்லது

(3) அரச அல்லது அரச அங்கீகாரம்பெற்ற நிறுவனம் ஒன்றினால் நடத்தப்படும் வீட்டு நிர்வாகம் அல்லது சமையற்கலை தொடர்பான ஆறு மாத கால பாடநெறியைப் பூர்த்திசெய்த சான்றிதழ்.

4. **சேவை அனுபவம்**.- உரிய தொழிலில் அரசாங்கத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 2 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

5. **வயதெல்லை**.- விண்ணப்பப்படிவங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையிலோ அல்லது மாகாண அரச சேவையிலோ உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.)

6. **சம்பளம்**.- பொது நிர்வாக சுற்றறிக்கை 6/2006 (IV) இற்கு அமைய இந்தப் பதவிக்கான சம்பளக் குறியீட்டு இலக்கம் : PL-2-2006 (A) சம்பள அளவுத் திட்டம்.- ரூபா 12,210 - 10 x 130 - 10 x 145 - 10 x 160 - 12 x 170 - ரூபா 18,600 உரித்தாகும்.

7. மேற்குறிப்பிடப்பட்ட பதவிக்காக விண்ணப்பிக்கும் சகலரும் சிறந்த இயல்பையும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடிய வகையிலும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றக்கூடிய உடல் மற்றும் உள ஆரோக்கியத்தையும் கொண்ட இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

8. **விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட வேண்டிய முறைகள்**.- (i) விண்ணப்பப்படிவங்கள் 2014.11.10 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம், த. பெ. இலக்கம் 557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் ;

(ii) அனுப்பப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரி விண்ணப்பப்படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை ஏ4 தாளைப் பயன்படுத்தி இலக்கம் 1 தொடக்கம் 7 வரை முதலாம் பக்கத்திலும், இலக்கம் 8 முதல் 11 வரை இரண்டாம் பக்கத்திலும் ஏனைய விடயங்களை அடுத்தடுத்த பக்கங்களிலும் வருமாறு தயாரித்து தமது கையெழுத்தினால் முறையாகப் பூர்த்தி செய்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பப்பத்திரத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்" என்று தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும் ;

(iv) பெறப்பட்ட விண்ணப்பங்களுள் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரிகள் மாத்திரமே தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் ;

(v) தொழில்சார் பரீட்சைக் கட்டணம் 400 ரூபாவாக இருப்பதோடு, அந்தக் கட்டணங்கள் தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் மக்கள் வங்கியின் மத்திய நகரக் கிளை இலக்கமான 176-100-139026228 எனும் கணக்கிலக்கத்திற்கு நாட்டிலுள்ள

ஏதேனும் ஒரு மக்கள் வங்கியின் கிளையில் பணத்தைச் செலுத்தி, செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய பகுதியில் கழன்று விடாதவாறு ஒட்டுதல் வேண்டும். உங்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றையும், பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றையும் உங்களுடன் வைத்துக்கொள்வது உகந்ததாகும். எந்தவொரு காரணத்துக்காகவும் பரீட்சைக் கட்டணம் மீள வழங்கப்பட மாட்டாது என்பதோடு காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது ;

(vi) விண்ணப்பப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது, அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப்பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/முப்படை அதிகாரி ஒருவர் அல்லது 20,030 ரூபாவைத் திரட்டிய மாதாந்த சம்பளமாகப் பெறும் அரசாங்கத்தில் நிரந்தர பதவி வகிக்கும் அதிகாரி ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;

(vii) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப்படிவங்களைத் தாம் சேவையாற்றும் திணைக்களத்தின் திணைக்களத் தலைவரூடாக அனுப்புதல் வேண்டும் ;

(viii) இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு மாற்றமான விண்ணப்பப்படிவங்கள், பூரணமில்லாத தகவல்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்களை தபாலில் அனுப்பும்போது ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக முன்கூட்டியே விண்ணப்பங்களை அனுப்புதல் உகந்ததாகும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றியும் அறியத்தரப்படமாட்டாது. உரிய தகைமைகள் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் உரிய முறையில் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(ix) விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவல்கள் போலியானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பதாரியின் அபேட்சகத் தன்மை நிராகரிக்கப்படும். அவ்வாறான போலியான அல்லது பிழையான தகவல்கள் ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் கண்டறியப்பட்டால் அதற்குரிய ஏற்பாடுகளுக்கு ஏற்ப சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9. **அரச கரும மொழிக்கொள்கையை அமுலாக்கல்.**- பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 07/2007 மற்றும் அதற்கு இயைபான சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப குறித்த மட்டத்தில் ஏனைய அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியை சேவையில் இணைந்த ஐந்து (5) வருட காலத்தினுள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

10. தொழில்சார் பரீட்சை நடபடி முறைகள் :

(i) ஒழுங்கான முறையில் விண்ணப்பங்களை அனுப்பிய அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரி தமக்கு குறிக்கப்பட்ட பரீட்சை மத்திய நிலையத்தின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டை சமர்ப்பிக்காத எந்தவொரு விண்ணப்பதாரியும் தொழில்சார் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

(ii) தொழில்சார் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளுக்காகவோ அல்லது இதர செலவுகளுக்காகவோ வேறெந்தக் கொடுப்பனவும் வழங்கப்பட மாட்டாது.

(iii) பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படுமளவு விண்ணப்பதாரர், தமது ஆளடையாளத்தைப் பரீட்சை மண்டபத்தில் உறுதிப்படுத்தல் வேண்டும். இதன் பொருட்டு-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

அல்லது

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு என்பவை மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(iv) தொழில்சார் பரீட்சைகளை நடாத்துதல் தொடர்பாக தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு பரீட்சை அபேட்சகர்கள் கட்டுப்பட வேண்டும்.

11. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்.**- (i) இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்தைக் கொண்டது. விதவை, அநாதை/தாரமிழந்தவர், அநாதை ஓய்வூதிய நிதியத்திற்கு சந்தா செலுத்துதல் வேண்டும்.

(ii) குறிப்பிடப்படுவதற்கு அமைய இந்த திணைக்களத்திற்கு உட்பட்ட எந்தவொரு தொழில்நுட்பவியல்/தொழில்நுட்பக் கல்லூரியிலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள், பதவிகளுக்கு உரித்தான ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கும், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும் அரசினால் அல்லது பொறுப்பான அமைச்சினால் அல்லது தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்கள பணிப்பாளரினால் வெளியிடப்படும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் 2009.02.20 ஆந் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை இலக்கம் 1589/30 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை ஏற்பாடுகளுடன் தொடர்பான பொது நிபந்தனைகள் மற்றும் ஏற்பாடுகள் பொருத்தமானதாகும்.

12. நிலவுகின்ற பதவி வெற்றிடங்களின் ஒரு பகுதியை அல்லது அனைத்தையும் நிரப்புவதற்கான உரிமை தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கே உள்ளது.

13. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அவ்வேளை சிங்கள மொழிக் கருத்தே மேலோங்கி நிற்க வேண்டும்.

ஜே. ஏ. ரஞ்சித்,
பணிப்பாளர் நாயகம்.

தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம்,
கொழும்பு 10,
2014, ஒற்றோபர் 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

**தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் ஆரம்பத் தேர்ச்சிபெற்ற சேவைத்தொகையில் சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பப்படிவம்**

1. விண்ணப்பதாரரின் பெயர் :-

(i) முதலெழுத்துக்கள் இறுதியில் குறிப்பிடப்பட்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் :-

(i) அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
தொலைபேசி இலக்கம் :----.

(ii) தனிப்பட்ட முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
தொலைபேசி இலக்கம் :----.

(முகவரி அல்லது தொலைபேசி இலக்கத்தில் மாற்றம் ஏற்படின் உடனடியாக அறியத்தரல் வேண்டும்.)

3. பிறந்த திகதி :-

ஆண்டு :---- மாதம் :---- திகதி :----

4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

6. பால் (ஆண்/பெண்) :----.

7. குடியியல் நிலைமை :----.
(திருமணமானவர்/திருமணமாகாதவர்/விதவை போன்றன)

8. கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை :
வருடம் ---- பரீட்சை சுட்டெண் ----

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

9. தொழில்சார் தகைமைகள் :

| பரீட்சை/டிப்ளோமா | வருடம் | தோற்றிய பாடங்கள் | பெறுபேறு | நிறுவனத்தின்/பல்கலைக் கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. சேவை அனுபவம் தொடர்பான விபரம் :

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | சேவையாற்றிய காலப்பகுதி | அரசாங்கத் துறை/இடைநிலை அரசாங்கத் துறை/ தனியார் துறை போன்றன |
|---|---|---|---|
| | | | |

11. (i) நீர் இலங்கைப் பிரசையாக இருப்பது பிறப்பினாலா/பதிவு செய்ததன் மூலமா என்பதைக் குறிப்பிடவும் :----.

(பதிவு செய்ததன் மூலம் எனின் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும்) :----.

(ii) இனம் :
(சிங்களவர்-1, இலங்கைத் தமிழர்-2, இலங்கை முஸ்லிம்-3, இந்திய வம்சாவளி-4, வேறு-5) ☐
(அடைப்பினுள் உரிய இலக்கத்தைக் குறிப்பிடவும்)

12. நீர் அரசாங்க பதவி ஒன்றிலிருந்து நீக்கப்பட்டவரா ? :----.

13. தற்போது அரசாங்க சேவையில் உள்ளீர் எனின் உமக்கு எதிராக திணைக்களம் ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளதா ? : ----.

14. நீர் ஏதேனுமொரு குற்றச்சாட்டு தொடர்பாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாகத் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறு இருப்பின் விபரத்தைக் குறிப்பிடவும் :----.

15. தொழில்சார் பரீட்சைக்காக கட்டணம் செலுத்திய மக்கள் வங்கிக் கிளை :----.
காசு செலுத்திய திகதி :----.

| பற்றுச்சீட்டு கழன்றுவிடாதவாறு இங்கு ஒட்டப்படுதல் வேண்டும் |
|---|

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவையும் உண்மையானவையும் என இத்தால் உறுதிமொழிகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எவையேனும் போலியானவை அல்லது பிழையானவை என நான் தெரிவுசெய்யப்பட முன்னர் தெரியவருமிடத்து, எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாகத் தெரியவரின் எந்தவித நஷ்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு கட்டுப்பட்டுள்ளேன் என்பதையும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

16. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

திரு./திருமதி/செல்வி ............................................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் ........................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்திய உத்தியோகத்தரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

(இந்தப் பகுதி அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)
**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இந்த அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் சேவையாற்றும் திரு./ திருமதி/ செல்வி ................................................. ....................................................... அவர்கள் .................................................................... எனும் பதவியில் பணியாற்றுபவர் எனவும், இவரது பணி மற்றும் நடத்தைகள் திருப்திகரமானவை எனவும், இவருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் இல்லை எனவும், அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான எண்ணங்கள் இல்லை எனவும் தொழில்சார் பரீட்சைக்கான கட்டணத்தைச் செலுத்தி அதன் பற்றுச்சீட்டை இணைத்துள்ளார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். இவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுமிடத்து, இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் அல்லது
அதிகாரம் வழங்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை)

10-370

---

## அரச கரும மொழிகள் திணைக்களம்

அரச கரும மொழிகள் திணைக்களத்தின் II ஆம் தர மொழிபெயர்ப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்) மற்றும் (சிங்களம்/தமிழ்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2014

அரச கரும மொழிகள் திணைக்களத்தில் பின்வரும் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| மொழிபெயர்ப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்) | – | 03 பதவிகள் |
| மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) | – | 06 பதவிகள் |

2. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 17,680-10 x 320-11 x 365-15 x 450- ரூபா 31,645 (எம்என்-6-2006(ஏ))

3. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும்.

4. **ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறை** :

| பிரிவு | வீதம் |
|---|---|
| திறந்த | 75% |
| மட்டுப்படுத்தப்பட்ட | 25% |
| திறன்கள் | ஏற்புடையதன்று |

**குறிப்பு**.- திறந்த பிரிவின்கீழ் ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமையுடைய போதியளவிலான விண்ணப்பதாரிகள் காணப்படாவிடில், அவ்வெற்றிட எண்ணிக்கையானது மட்டுப்படுத்தப்பட்ட பிரிவின்கீழ் நிரப்பப்படும்.

மட்டுப்படுத்தப்பட்ட பிரிவின்கீழ் தகைமையுடைய போதியளவிலான விண்ணப்பதாரிகள் காணப்படாவிடில், அவ்வெற்றிட எண்ணிக்கையானது திறந்த பிரிவின்கீழ் நிரப்பப்படும்.

5. **தகைமைகள்**.- II ஆம் தர மொழிபெயர்ப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்) மற்றும் (சிங்களம்/தமிழ்) பதவிகளுக்கு (மட்டுப்படுத்தப்பட்ட/திறந்த) பின்வரும் தகைமைகள் ஏற்புடையதாகும் :-

5.1 **மொழிபெயர்ப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்)** :

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தமிழ் மொழியையோ அல்லது ஆங்கில மொழியையோ ஒரு பாடமாக சித்தியடைந்து பெறப்பட்ட பட்டமொன்றைக் கொண்டிருத்தல்

மற்றும்

(i) பட்டத்திற்கு தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழி/ஆங்கில இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைக் கொண்டிருத்தல் அல்லது பட்டத்திற்கு ஆங்கில மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தமிழ் மொழி மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல்

அல்லது

(ii) பட்டத்திற்கு தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் குறைந்தது சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது பட்டத்திற்கு ஆங்கில மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தமிழ் மொழியில் குறைந்தது சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல்

(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மொழிபெயர்ப்பு முறைகளை ஒரு பாடமாகச் சித்தியடைந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டமொன்றைக் கொண்டிருத்தல்

மற்றும்

(i) க. பொத. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழி/ஆங்கில இலக்கியத்திற்கு திறமைச் சித்தியொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தமிழ் மொழி மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல்

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு குறைந்தது சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தமிழ் மொழியில் குறைந்தது சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல்

**மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்)** :

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் தமிழ் மொழி அல்லது சிங்கள மொழியை ஒரு பாடமாக சித்தியடைந்து பெறப்பட்ட பட்டமொன்றைக் கொண்டிருத்தல்

மற்றும்

(i) பட்டத்திற்கு தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்கள மொழி மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது பட்டத்திற்கு சிங்கள மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தமிழ் மொழி மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல்

அல்லது

(ii) பட்டத்திற்கு தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சிங்கள மொழியில் குறைந்தது சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது பட்டத்திற்கு சிங்கள மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தமிழ் மொழியில் குறைந்தது சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல்

(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மொழிபெயர்ப்பு முறைகளை ஒரு பாடமாகச் சித்தியடைந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டமொன்றைக் கொண்டிருத்தல்

மற்றும்

(i) க. பொத. த. (சா. த.) பரீட்சையில் சிங்கள மொழி மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியொன்றைப் பெற்றிருத்தல் அத்துடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தமிழ் மொழி மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல்

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சிங்கள மொழியில் குறைந்தது சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தமிழ் மொழியில் குறைந்தது சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல்

(3) இலங்கை கீழைத்தேய மொழி ஊக்குவிப்புச் சங்கத்தில் இறுதி (பண்டிதர்) பட்டம் பெற்றிருத்தல்

மற்றும்

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தமிழ் மொழியில் திறமைச் திறமைச் சித்தியொன்றைப் பெற்றிருத்தல்

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தமிழ் மொழியில் சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல்

5.2 உடல்சார் தகைமைகள்.- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும் பணிகளை ஆற்றுவதற்குமுரிய போதிய உடல் மற்றும் உளத் தகுதியுடையவராய் இருத்தல் வேண்டும்.

5.3 ஏனையவை :

(1) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(2) விண்ணப்பதாரிகள் சிறந்த நல்லொழுக்கத்தை உடையவராய் இருத்தல் வேண்டும்.

(3) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பப்படிவம் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்படும் திகதிக்கு சகல வழிகளிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

5.4 தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் பதவிகள் நிரந்தரமானவையாக இருத்தல் வேண்டும் :

6. **சேவை நிபந்தனைகள்**.- (i) நியமிக்கப்படும் எண்ணிக்கையும் பதவி நடைமுறைப்படுத்தும் திகதியும் அரச கரும மொழிகள் ஆணையாளரினால் தீர்மானிக்கப்படும். குறிப்பிட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையையோ சகல வெற்றிடங்களையோ நிரப்பும் அதிகாரம் அரச கரும மொழிகள் ஆணையாளருக்கே உண்டு.

(ii) பதவிக்கு நியமனம் பெற்று 3 வருடங்கள் கடப்பதற்கு முன் முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) நியமனம் பெற்று 5 வருடங்கள் கடப்பதற்கு முன் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இன் பிரகாரம் மொழித் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(iv) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் அரச சேவைகள் ஆணைக்குழுவின் 1586/30 ஆம் இலக்க மற்றும் 2009.02.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நடைமுறை ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும் அமைய பதவியில் II ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

(v) அனைத்து ஆட்சேர்ப்புகளும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கும் எதிர்காலத்தில் அவ்வாட்சேர்ப்பு நடைமுறைக்கு செய்யப்படும் திருத்தங்களுக்கும் உட்படல் வேண்டும்.

(vi) அரச சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய திணைக்கள/நிறுவனத் தலைவரின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

7. **வயதெல்லை**.- திறந்த விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று 21 வயதிற்கு குறையாமல் இருப்பதோடு 35 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். மட்டுப்படுத்தப்பட்ட : ஏற்புடையதன்று.

8. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.- எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதோடு பொதுவான ஒரு நேர்முகப் பரீட்சையின் மூலம் தகைமைகள் பரிசீலிக்கப்படும்.

8.1 பரீட்சைக்குரிய பாடங்கள் :

| | வினாப்பத்திரம் | காலம் | மொத்த புள்ளிகள் | சித்தியடைய தேவையான புள்ளிகள் |
|---|---|---|---|---|
| மொழிபெயர்ப்பாளர் (ஆங்கிலம்/தமிழ்) | 1. மொழிபெயர்ப்பு- தமிழ் மொழி யிலிருந்து ஆங்கில மொழிக்கு | 3 மணித்தியாலம் | 100 | 40% |
| | 2. மொழிபெயர்ப்பு- ஆங்கில மொழி யிலிருந்து தமிழ் மொழிக்கு | 3 மணித்தியாலம் | 100 | 40% |
| | 3. தமிழ் மொழி | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40% |
| | 4. ஆங்கில மொழி | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40% |
| மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) | 1. மொழிபெயர்ப்பு- சிங்கள மொழி யிலிருந்து தமிழ் மொழிக்கு | 3 மணித்தியாலம் | 100 | 40% |
| | 2. மொழிபெயர்ப்பு- தமிழ் மொழி யிலிருந்து சிங்கள மொழிக்கு | 3 மணித்தியாலம் | 100 | 40% |
| | 3. சிங்கள மொழி | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40% |
| | 4. தமிழ் மொழி | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40% |

*8.2 பாடப்பரப்பு :*

| | *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடப்பரப்பு* |
|---|---|---|
| *மொழி பெயர்ப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்)* | *1. மொழிபெயர்ப்பு.- தமிழ் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு* | *நிர்வாக, சட்ட, விஞ்ஞான, தொழி நுட்ப, கலை, இலக்கிய மற்றும் சமய ஆவணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பந்திகளை தமிழ் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தல்.* |
| | *2. மொழிபெயர்ப்பு.- ஆங்கில மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு* | *நிர்வாக, சட்ட, விஞ்ஞான, தொழி நுட்ப, கலை, இலக்கிய மற்றும் சமய ஆவணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பந்திகளை ஆங்கில மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தல்.* |
| | *3. தமிழ் மொழி* | *கட்டுரை எழுதுதல், சாராம்சம் எழுதுதல், தரப்பட்ட பந்தியொன்றை சுருக்கமாகத் தமது சொற்களில் தெரிவித்தல், சொற்களின் பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் அமைத்தல், வாக்கியங்களிலுள்ள இலக்கணப் பிழைகளைத் திருத்துதல், பேச்சு வழக்குகளை விளக்குதல், எழுத்துக்கூட்டல்* |
| | *4. ஆங்கில மொழி* | *கட்டுரை எழுதுதல், தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு அவற்றின் பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் அமைத்தல், பேச்சு வழக்குகளை விளக்குதல், கூட்டு மற்றும் சிக்கலான வாக்கியங்களை விளக்குதல்* |
| *மொழி பெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்)* | *1. மொழிபெயர்ப்பு.- தமிழ் மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு* | *நிர்வாக, சட்ட, விஞ்ஞான, தொழி நுட்ப, கலை, இலக்கிய மற்றும் சமய ஆவணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பந்திகளை தமிழ் மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தல்.* |
| | *2. மொழிபெயர்ப்பு.- சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு* | *நிர்வாக, சட்ட, விஞ்ஞான, தொழி நுட்ப, கலை, இலக்கிய மற்றும் சமய ஆவணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பந்திகளை சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தல்.* |
| | *3. சிங்கள மொழி* | *கட்டுரை எழுதுதல், சாராம்சம் எழுதுதல், தரப்பட்ட பந்தியொன்றைச் சுருக்கமாகத் தமது சொற்களில் தெரிவித்தல், சொற்களின் பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் அமைத்தல், வாக்கியங்களிலுள்ள இலக்கணப் பிழைகளை திருத்துதல், பேச்சு வழக்குகளை விளக்குதல், எழுத்துக் கூட்டல்* |
| | *4. தமிழ் மொழி* | *கட்டுரை எழுதுதல், சாராம்சம் எழுதுதல், தரப்பட்ட பந்தியொன்றைச் சுருக்கமாகத் தமது சொற்களில் தெரிவித்தல், சொற்களின் பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் அமைத்தல், வாக்கியங்களிலுள்ள இலக்கணப் பிழைகளைத் திருத்துதல், பேச்சு வழக்குகளை விளக்குதல், எழுத்துக்கூட்டல்* |

*9.* **போலியான தகவல்களுக்கான தண்டனை.-** *விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்யும்போது கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சை சட்டதிட்டங்களுக்கமைய விண்ணப்பதாரி ஒருவர் பொருத்தமற்றவர் என்பது தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தித் தன்மையை இரத்துச்செய்ய முடியும். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலொன்று எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது பொய்யானது எனத் தெரியவந்தால் அவரை அரச சேவையிலிருந்தே நீக்க முடியும். அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அரச கரும மொழிகள் ஆணையாளரால் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவதை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்ற அங்கீகாரமாகக் கருதலாகாது. பரீட்சை நடாத்துவது தொடர்பாக அரசகரும மொழிகள் ஆணையாளரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் கீழ்ப்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறுபவர்கள் அரச கரும மொழிகள் ஆணையாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*10. இவ்வர்த்தமானி அறிவித்தல் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பதங்களுக்கிடையில் ஏதாவது உடன்பாடோ அல்லது வேறுபாடோ ஏற்பட்டால் அப்போது சிங்கள மொழிப் பதங்களே மேலோங்கி இருத்தல் வேண்டும்.*

11. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் 500 ரூபாவாகும். இத்தொகை அரச கரும மொழிகள் ஆணையாளரின் வருமானத் தலைப்பு 2003-99-00 கீழ் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் செலுத்த முடியும். அதற்காக வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு பற்றுச்சீட்டை ஒட்டுதல் வேண்டும். (அதன் பிரதியை தம்வசம் வைத்திருத்தல் பயனுடையதாகும்.)

12. விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்யும்போது கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சை சட்டதிட்டங்களுக்கமைய விண்ணப்பதாரி ஒருவர் பொருத்தமற்றவர் என்பது தெரியவந்தால் நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் அல்லது நேர்முகப் பரீட்சை நடைபெறும்போது அல்லது பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சைத் தகைமையை இரத்துச்செய்ய முடியும். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலொன்று எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது பொய்யானது எனத் தெரியவந்தால் அவரை அரச சேவையில் இருந்து நீக்க முடியும்.

13. விண்ணப்பப்படிவத்தை ஏ4 (24x29cm) அளவிலான தாளைப் பயன்படுத்தி,

(அ) தொடர் இலக்கம் 1 முதல் 3.4 வரையான பந்திகள் முதல் பக்கத்திலும்

(ஆ) தொடர் இலக்கம் நான்கிலிருந்து அடுத்த பக்கங்களில் உள்ளடக்கப்படுமாறு விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவம் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்படும் பெயர் சிங்கள மொழியிலான விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் மொழியிலான விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும். குறித்த தகவல்களை தமது கையெழுத்திலேயே தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

13.1 விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) மற்றும் (தமிழ்/ஆங்கிலம்) பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2014" எனக் குறிப்பிடவும்.

13.2 சரியான முறையில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2014.11.10 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு கீழ்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பப்படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

அரச கரும மொழிகள் ஆணையாளர்,
அரச கரும மொழிகள் திணைக்களம்,
இல. 341/7, "பாஷா மந்திரய",
கோட்டே வீதி,
இராஜகிரிய.

13.3 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபரினால், சமாதான நீதவானால், சத்தியப்பிரமாணம் செய்த ஆணையாளரினால், பிரசித்த நொத்தாரிசால், முப்படையில் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரினால், வருடாந்த சம்பளம் 2,40,860 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளத்தைப் பெறும் நிரந்தர அரச பதவியிலுள்ள உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

13.4 தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை உரிய திணைக்கள/நிறுவனத் தலைவர் ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

14. விண்ணப்பதாரியின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை நிலைய அதிபரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

15. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் தொடர்பில் அரச கரும மொழிகள் ஆணையாளரே தீர்மானிப்பார். விண்ணப்பதாரர்கள் இவ்வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட பொது சட்டதிட்டங்களின் பிரகாரம் செயலாற்றுவதற்கு கட்டுப்பட்டுள்ளனர்.

ஜே. டீ. சீ. ஜயசிங்க,
அரச கரும மொழிகள் ஆணையாளர்.

அரச கரும மொழிகள் திணைக்களம்,
இல. 341/7, "பாஷா மந்திரய",
கோட்டை வீதி,
இராஜகிரிய.
2014, செத்தெம்பர் 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

## மொழி பெயர்ப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்) மற்றும் (சிங்களம்/தமிழ்) பதவிக்கான விண்ணப்பப்படிவம்
Application for the Post of Translator (Tamil/English) & (Tamil/Sinhala)

☐
(அலுவலக பயன்பாட்டுக்காக)

விண்ணப்பிக்கும் பதவி :

1. மொழி பெயர்ப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்)
2. மொழி பெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) ☐

(உரிய இலக்கத்தைக் குறிப்பிடுக.)

1. பெயர் :----.
   1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் Mr./Mrs/Miss (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
   1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐
2. முகவரி :
   2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   2.2 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   2.3 அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
   2.4 அனுமதிப்பத்திரங்களை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
   2.5 தொலைபேசி இலக்கம் :----.
   2.6 விண்ணப்பதாரி நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :----.
   2.7 வசிக்கும் கால எல்லை :----.
   2.8 கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.
3.
   3.1 பால் :
   (பெண்-1, ஆண்-0) ☐
   (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)
   3.2 விவாகமானவர்/விவாகமாகாதவர் :
   விவாகமானவர்-1, விவாகமாகாதவர்-2 ☐
   (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)
   3.3 பிறந்த திகதி :
   ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐
   3.4 2014.11.10 ஆந் திகதியன்று வயது :
   வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐
4. கல்வித் தகைமைகள் :
   4.1 (அ) பட்டம் :
   (ஆ) பட்டம் பெற்றுக்கொண்ட வருடம் மற்றும் பல்கலைக்கழகம் :
   (இ) பட்டம் தொடர்ந்துள்ள பாடங்கள் :
   4.2 க. பொ. த. (உ. த.) :
   (i) பரீட்சையின் வருடம் மற்றும் மாதம் :
   (ii) சுட்டிலக்கம் :
   (iii) பெறுபேறுகள் :

| பாடங்கள் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |

4.3 க. பொ. த. (சா. த.) :
(i) பரீட்சையின் வருடம் மற்றும் மாதம் :
(ii) சுட்டிலக்கம் :
(iii) பெறுபேறுகள் :

| பாடங்கள் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

5. நீர் எப்போதேனும் அல்லது ஏதேனும் குற்றத்திற்கு நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ? :
(உரிய கூட்டினுள் அடையாளமிடுக) :

ஆம் ☐ இல்லை ☐

ஆம் எனில் அது தொடர்பான விபரங்கள் :................................

6. பரீட்சைக் கட்டணம் :
(i) பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி :----.
(iii) செலுத்திய தொகை :

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்துக்கொள்ளவும்.) |

7. **விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல் :**
இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானது எனவும், இந்த ஆட்சேர்ப்புச் செய்யும் பரீட்சையின் நிபந்தனைகளின்படி நான் தகைமையற்றவர் எனத் தெரியவரும் சந்தர்ப்பத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடாத்தும்பொழுது அல்லது அதற்குப் பின்னர் அல்லது எனது பரீட்சைத் தன்மையை இரத்துச்செய்வதற்கு எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்திற்கும் நான் உடன்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பித்துள்ள ............................................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
பதவி முத்திரை :----.
திகதி :----.

(தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்காக)

***திணைக்களத் தலைவரின் உறுதியுரை :***

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ........................................................ என்பவர் ....................................................... ஆந் திகதியிலிருந்து இவ் அலுவலகத்தில் பணியாற்றுகின்றார் எனவும் அவரின் வேலை மற்றும் நடத்தை எப்போதும் திருப்திகரமானது எனவும் மேற்குறிப்பிட்டுள்ள சகல தகவல்களையும் இவ் அலுவலகத்திலுள்ள அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு நான் தனிப்பட்ட முறையில் பரிசீலித்தேன் எனவும் அவை சரியானவை எனவும் 2014, ............................. ஆம் மாதம் ............................. ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
பதவி முத்திரை :----.
திகதி :----.

*10-450*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.